வாய்ப்பாக இருக்கும்-ஆகையால், மேலூருக்கும் நத்தம் தொகுதிக்கும் இடையிலே இருக்கின்ற மேலவளவு பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இக்கேள்வி பட்டுக்கோட்டை பற்றியது, கொட்டாம்பட்டி பற்றியது இல்லை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கனிவுடன் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, செல்லூரில் துணை மின் நிலையம் அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வரக்கூடிய நடவடிக்கை பற்றிய நிலையை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2. ஒலிவாங்கிகளை உறுப்பினர்களின் உயரத்திற்கேற்ப மாற்றியமைக்கும் வசதி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக ஒரு கோரிக்கையை உங்கள் முன் வைக்க*

விரும்புகிறேன். இங்கு மைக்குகள் வைத்திருக்கிறீர்கள். இவை non-adjustable மைக்குகள். உயரமே இவ்வளவுதான். நடுத்தர உயரம் உள்ள உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள் மிகவும் உயரமானவர். அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன் அவர்களும் உயரமானவர். இவர்கள் பேசுகின்றபோது இப்படிக் குனிந்து பேசினால்தான் என்ன பேசுகிறார்கள் என்று கேட்கிறது. ஆண்களுக்கே உரிய இலட்சணமாக நிமிர்ந்து நின்று பேசினால், என்ன பேசுகிறார்கள் என்று கேட்கமாட்டேன் என்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தயவுசெய்து இந்த மைக்குகளை மாற்றி, adjustable மைக்குகளை வைக்க வேண்டும். அவரவர் உயரத்திற்கு ஏற்ப adjust செய்துகொள்ளும் வசதியுடன் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தினை ஏற்று உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

11—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

*200—**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை பூங்கா நகரில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்து காவிரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?